### தமிழகத்தில் அங்கீகாரம் இல்லாமல்

# நர்சிங் டிப்ளமோ படிப்புகளை நடத்தும் கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை

## செவிலியர் குழும பதிவாளர் அனிகிரேஸ் எச்சரிக்கை

சென்னை, மார்ச்.17– அங்கீகாரம் இல்லாமல் நர்சிங் டிப்ளமோ உள்ளிட்ட படிப்புகளை நடத்தும் கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு செவிலியர் குழும பதிவாளர் அனிகிரேஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### முறையான நர்சிங் கல்வி

இதுதொடர்பாக அனிகிரேஸ் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

தமிழ்நாட்டில் நர்சிங் பள்ளி, கல்லூரிகளுக்கு அங்கீகாரத்தை தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு செவிலியர் குழுமம் (நர்சிங் கவுன்சில்) மற்றும் இந்தியன் நர்சிங் கவுன்சில் ஆகியவை அளித்து வருகின்றன. இத்தகைய கவுன்சில்களின் அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்வி நிறுவனங்களில் படிப்பதே முறையான கல்விக்கு வழிவகுக்கும்.

அதனால் நர்சிங் படிக்க விரும்பும் மாணவ, மாணவிகள் தாங்கள் தேர்வு செய்யும் நர்சிங் பள்ளி அல்லது கல்லூரி அங்கீகாரம் பெற்றுள்ளதா? என்பதை எங்களின் www.tamilnadunursingcouncil.com என்ற இணையதளத்தைப் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும்.

நர்சிங் பயிற்சி என்ற பெயரில் பல பெரிய மற்றும் சிறிய மருத்துவமனைகள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் கீழ்க்கண்ட 18 வகையான பெயர்களில் போலி நர்சிங் பயிற்சிகளை நடத்தி நர்சிங் டிப்ளமோ மற்றும் சான்றிதழ்களை வழங்குகின்றன. இந்த சான்றிதழ்களை தமிழ்நாடு நர்சிங் கவுன்சிலில் பதிவு செய்ய முடியாது.

### 18 போலி படிப்புகள்

அதன்படி, டிப்ளமோ இன் நர்சிங் அசிஸ்டன்ட் கோர்ஸ் (6 மாதங்கள் அல்லது 2 ஆண்டுகள்), டிப்ளமோ இன் நர்சிங் (2 ஆண்டுகள்), டிப்ளமோ இன் பர்ஸ்ட் எய்ட் நர்சிங் (2 ஆண்டுகள்), வில்லேஜ் ஹெல்த் நர்சிங் (2 ஆண்டுகள்), டிப்ளமோ இன் நர்சிங் எய்டு (2 ஆண்டுகள்), டிப்ளமோ இன் பர்ஸ்ட் எய்ட் (2 ஆண்டுகள்), டிப்ளமோ இன் பர்ஸ்ட் எய்ட் அன்ட் பிராக்டிகல் நர்சிங், டிப்ளமோ இன் பிராக்டிகல் நர்சிங் (ஒரு ஆண்டு அல்லது 2 ஆண்டுகள்), சர்ட்டிபிக்கேட் இன் நர்சிங் (ஒரு ஆண்டு), அட்வான்ஸ்ட் டிப்ளமோ இன் நர்சிங் அசிஸ்டன்ட் (2 ஆண்டுகள்), டிப்ளமோ இன் ஹெல்த் அசிஸ்டன்ஸ் (ஒரு ஆண்டு), நர்ஸ் டெக்னீஷியன் கோர்ஸ், ஹெல்த் கைடு கோர்ஸ், சர்ட்டிபிக்கேட் இன் ஹெல்த் அசிஸ்டன்ட், சர்ட்டிபிக்கேட் இன் ஹாஸ்பிட்டல் அசிஸ்டன்ட், சர்ட்டிபிக்கேட் இன் பெட் சைட் அசிஸ்டன்ட், சர்ட்டிபிக்கேட் இன் பேஷன்ட் கேர், சர்ட்டிபிக்கேட் இன் ஹோம் ஹெல்த் கேர் ஆகிய பெயர்களில் போலி நர்சிங் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

### எச்சரிக்கை

தமிழ்நாடு செவிலியர் குழும சட்டப் பிரிவு 12(ஏ)(1) மற்றும் (2)–ன்படி, இதுபோன்ற போலி படிப்புகளை நர்சிங் என்ற பெயரில் நடத்தும் நிறுவனம், சங்கம் மற்றும் பல்கலைக்கழகங்கள் மீது அபராதமும் உரிய நடவடிக்கையும் எடுக்கப்படும் என்று அறிவிக்கிறோம். மேலும் சென்னை ஐகோர்ட்டு ரிட் மனு எண் 16556/2014 மீது 2015–ம் ஆண்டு ஏப்ரல் 13–ந் தேதியன்று பிறப்பித்த ஆணையின் படி, போலி நர்சிங் பயிற்சி நிறுவனங்கள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அந்த அங்கீகரிக்கப்படாத படிப்புகளை படித்தால் அரசுப் பணியில் சேர முடியாது. இதைப் படித்த மாணவ, மாணவிகள் எந்தவொரு மருத்துவமனையிலும் அங்கீகரிக்கப்பட்ட செவிலியராக பணியாற்ற இயலாது. நர்சிங் கவுன்சிலில் இந்தப் படிப்புகளை பதிவு செய்யவும் முடியாது. பதிவு செய்யாமல் பணியாற்றி, அது நர்சிங் கவுன்சிலின் கவனத்துக்கு தெரிய வந்தால், கவுன்சில் சட்டப்படி அபராதம் விதிக்கப்படும்.

எனவே இத்தகைய நிறுவனங்கள் தானாக முன்வந்து மேற்கூறப்பட்ட பயிற்சிகளை நிறுத்திவிட அறிவுறுத்தப்படுகிறார்கள். இல்லாவிட்டால், அதுபோன்ற நிறுவனங்களின் மீது கவுன்சில் விதிகளின்படி அபராதமும் மற்றும் சட்டப்படி உரிய நடவடிக்கையும் எடுக்க நேரிடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


ஆட்கள் தேவை – உள்நாடு, வெளிநாடு

SAUDI - REQD. FOR REPUTED CO.
WALK IN FOR SHORTLISTING ON 18th, 19th & 20th MARCH, 2019
At : 2/8, 6th Street, 2nd Floor, Ganesh Bldg, K.V.Colony, Off Arya Gowda Road, West Mambalam, Chennai - 33.
Contact No.: 044 24740857 / 9176082214
CLIENT INTERVIEW ON 21st MARCH, 2019
♦ PIPE FITTERS ♦ GENERAL FITTERS ♦ HYDRO JETTER
♦ MECHANICAL FITTERS ♦ HYDRO TEST FITTERS
♦ ASST. FITTERS (Pipe / Mechanical / General / Hydro Test)
♦ CATALYST TECHNS. ♦ ASST. CATALYST TECHNS.
All above should have experience in Similar Field.
Contact / Apply immediately with complete CV, copies of certificates, original passport & 2 colour photos to :
ASMACS ISO 9001:2015 CERTIFIED COMPANY
411, Sai Chambers, 4th Flr, Opp. Railway Station, Santacruz (E), Mumbai- 400 055.
(Lic.No.: B-0115/ORI/PER/1000+/5/2987/91)
Email : chennai@asmacs.net Validity : 25.07.2021
For online job posting & vacancies log on to: www.jobs4hunt.com

SAUDI ARABIA Urgent requirement for SAUDI BINLADIN GROUP
MARBLE AND GRANITE FACTORY - (Makkah / Madinah Project)
CLIENT INTERVIEW IN CHENNAI SHORTLISTING IN PROGRESS
♦ QC FOREMEN ♦ CNC MACHINE OPERATORS VACANCIES IN LARGE NOS.
♦ CNC ELECTRICAL TECHNICIANS Block Visa Ready, Immediate Departure
QC Foremen should be Diploma holder, knowledge of cutting and finishing process of Marble and Granite.
Interested candidates having 3+ years experience in relevant field may contact/email their Cvs to:
3rd Floor, Akshaya Plaza, No.108, Adithanar Road, Opp: Egmore Court, Pudupet, CHENNAI-600002. Email: itlchennai@itlservice.net / jobschennai@itlservice.net
Mobile: 8807060341 / 9042797774
TRICHY Mobile: 9442222092 / 9487722092
INTERNATIONAL TRADE LINKS HR CONSULTANTS
MUMBAI Call : 022 4360 7777 / 7729 / 7734
REG. LICENSE NO.: B-0602/MUM/PART/1000+/5/2249/87 Validity date: 30/12/2023

CLIENT INTERVIEW SOON FOR ONE OF THE REPUTED FOOD SAFETY & HYGIENE TRAINING & CERTIFICATION PROVIDER IN KSA
TRAINERS / INSTRUCTORS / AUDITORS / VACANCY IN LARGE NOS.

KOC & KNPC PROJECT KUWAIT
CLIENT INTERVIEW: 20th MAR @ CHENNAI